**Tamil Nadu Pollution Control Board**

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY COVERING EXTENT OF 2.28.0 HA FOR THIRU. K.RANGANATHAN ROUGH STONE AND GRAVEL QUARRY AT S.F. NO. 174/4, 176/1 IN IDAYARPALAYAM VILLAGE, SULUR TALUK, COIMBATORE DISTRICT AT M/S. SUYA UTHAVI KULU KOOTAMAIPU BUILDING IN PERIYA KUILI VILLAGE, PACCHAPALAYAM PANCHAYAT COIMBATORE DISTRICT, ON 03.12.2025 AT 12.00 NOON.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Tmt.R. Maruthippriya | : | **Revenue Divisional Officer,**<br>Coimbatore South,<br>Coimbatore District. |
| 2. | Dr.C.R.Sathish Kumar | : | **District Environmental Engineer,**<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 3. | Thiru.R.Senthil Kumar | | **Tahsildar,**<br>Sulur,<br>Coimbatore |
| 4. | Thiru.S.Senthil Kumar | : | **Assistant Environmental Engineer,**<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 5. | Dr.S.Suriya kumar | : | EIA Consultant,<br>Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd,<br>Salem. |
| 6. | Public | : | 29 |

*****

The proposed Mr.K.Ranganathan Rough Stone and Gravel Quarry Project at Idayarpalayam Village, Sulur Taluk, Coimbatore District has a total area of 2.28.0 hectares. The **Revenue Divisional Officer,** Tahsildar of Sulur, the public to attend public hearing and the quarry owners were welcomed by the District Environmental Engineer, TNPCB, Coimbatore South. According to the Environmental Impact Assessment Notification 2006, of the Union Ministry of Environment, Forest and Climate Change, GOI, it is necessary to obtain prior Environmental Clearance for 8 types of industries, and while obtaining such prior environmental clearance, it is a rule to obtain the views of the public and record it and submit the same to the State Environmental Impact Assessment Authority. Accordingly, he informed that the details of this public hearing had already been published in the Tamil and English dailies, Dinamalar and The New Indian Express on 28.10.2025 and the Environmental Impact Assessment Report and Project Summary were placed for public viewing at the necessary offices. Further, the information about this meeting has been announced through Flex boards at two prominent places in the village and handouts have been distributed to the public. The photographs of which are shown here.

He further informed that on behalf of the quarry owners, the project consultant will explain the details of Rough Stone and Gravel Quarry to the public and after that, the public will be asked to register their views regarding the project. All this audio and video recording of proceedings will be submitted to the Tamil Nadu State Environmental Impact Assessment Authority, Chennai.

The Revenue Divisional Officer inaugurated the public hearing meeting and said that the purpose of the meeting is to record the environmental comments raised by the public. Later, the project consultant of the Rough Stone and Gravel Quarry project, gave a presentation on the proposed ordinary stone and gravel quarries.

Following this, Dr.S.Suriya kumar EIA Consultant, Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd, Salem, has welcomed everyone and gave a detailed explanation through a video presentation about the proposed Rough Stone and Gravel Quarry and the environmental management plan to be implemented during its project period.

Then, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South, said that the public's comments on the Rough stone and gravel quarry project, which was currently being explained in detail through a presentation and the public views will be recorded on the video form also.

Accordingly, the public recorded their following comments and suggestions.

**Mr. Chaukanth, Idayarpalayam**:

My name is Chaukanth. I am from Idayarpalayam, I have no objection for granting a license for this quarry.

**Mr. Saravanan, Idayarpalayam**:

My name is Saravanan. I come from Idayarpalayam village. My farm is next to Ranganathan sir's quarry. I have no objection for granting license to the Quarry.

**Mr. Balakrishnan, Malumichampatti**:

My name is Balakrishnan from Malumichampatti Village. I have no objection for granting permission for this quarry.

**Mr. Ponnusamy**:

My name is Ponnusamy. I have no objection for granting permission for this quarry.

**Mr. Salim, Bogampatti**:

My name is Salim. I am from Bogampatti. I have no objection for granting license to the Quarry.

**Mr. Selvaraj, Myleripalayam**:

Greetings to the Government officials and to the general public gathered here. This quarry can directly provide employment to 21 people and indirectly to 40 people. I hope it will provide a good path for the development of about 61 families. Hence, I have no objection to the establishment of this quarry.

**Mr. Shanmugavel**:

My name is Shanmugavel. I have no objection to Mr. Ranganathan Quarry.

**Mr. Venkatesan, Bogampatti**:

My name is Venkatesan. It is very difficult to get stone for our SKT Blue Metal Crusher now. So if you process it quickly, it will be use to us. Thank you.

**Mrs.Jebakani, Ramanathapuram**:

She greeted everyone. My name is Jebakani. I would also like to pay my respects to the officers, present here. Stone quarry is always something that can uplift people. They help for raising livestock and will help keep the environment healthy. They provide educational and medical facilities, provide employment opportunities, and improve their livelihood by providing employment opportunities appropriate to their studies. Therefore, I am expressing my opinion that the quarry should be given a license without any restrictions. Thank you.

**District Environmental Engineer**:

The details of person, who attended the above public hearing the public's views expressed in the meeting, the recorded video proceedings of meeting along with photographs will be submitted to the SEIAA, Chennai

At the end of the meeting, the District Environmental Engineer thanked the Revenue Divisional Officer who chaired the public hearing meeting, all the public and all the Officials.

**No. of Petitions Received : 0**

R. [signature] 18/12/25
**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Coimbatore South.**

[signature] 18/12/25
**Revenue Divisional Officer,**
**Coimbatore South,**
**Coimbatore District**

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

<u>கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், இடையர்பாளையம் கிராமத்தில் க.ச.எண். 174/4, 176/1 ல், 2.28.0 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.K.ரங்கநாதன் அவர்களின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டமானது கோயம்புத்தூர் மாவட்டம், பச்சாபாளையம் ஊராட்சி, பெரியகுயிலி கிராமத்திலுள்ள சுய உதவிக்குழு கூட்டமைப்பு கட்டிடத்தில் 03.12.2025 அன்று நண்பகல் [illegible] மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக்கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.</u>

**<u>பங்கேற்றோர்:</u>**

| | | |
|---|---|---|
| 1 | திருமதி.R.மாருதிப்பிரியா | வருவாய் கோட்டாட்சியர்<br>கோயம்புத்தூர் தெற்கு<br>கோயம்புத்தூர் மாவட்டம் |
| 2. | முனைவர்.C.R. சதீஸ் குமார் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | திரு.R.செந்தில்குமார் | வட்டாட்சியர்,<br>சூலூர்,<br>கோயம்புத்தூர் மாவட்டம் |
| 4. | திரு.S.செந்தில்குமார் | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் தெற்கு |
| 5. | முனைவர்.சே.சூரியக்குமார் | திட்ட ஆலோசகர்,<br>Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd<br>சேலம். |
| 6. | பொதுமக்கள் எண்ணிக்கை | 29 |

*****

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், **இடையர்பாளையம்** கிராமத்தில் க.ச.எண். 174/4, 176/1 ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.K.ரங்கநாதன் அவர்களின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டமானது மொத்த பரப்பளவு 2.28.0 ஹெக்டர்ஸ் ஆகும். இக்குவாரி திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள வருவாய் கோட்டாட்சியர் அவர்களையும், வட்டாட்சியர் அவர்களையும், பொதுமக்களையும் மற்றும் குவாரி உரிமையாளர்களையும், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006 ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொது மக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களான முறையே தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமலர் ஆகிய நாளிதழ்களில் 28.10.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொது மக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார். மேலும், இந்த கூட்டம் நடைபெறவுள்ள தகவலை கிராமத்திலுள்ள முக்கியமான இரண்டு இடங்களில் விளம்பர பலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது மக்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது, இதனுடைய புகைப்படங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் சாதாரணக் கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்க உரை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும் அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்களை பதிவு செய்யுமாறும் இவை அனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார் அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்பந்தமான கருத்துக்களை பதிவு செய்வது கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரை உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் முனைவர்.சே.சூரியக்குமார் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்க காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்ககாட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**<u>1.திரு. சௌகந்த், இடையர்பாளையம்</u>:**

என் பெயர் சௌகந்த். நான் இடையர்பாளையத்தில் வசிக்கிறேன், இந்த குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. நான் இந்த குவாரிக்கு ஆதரவு தருகிறேன்.

**<u>2.திரு.சரவணன், இடையர்பாளையம்</u>:**

வணக்கம். என் பெயர் சரவணன். இடையர்பாளையம் கிராமத்திலிருந்து வருகிறேன். ரங்கநாதன் சார் குவாரிக்கு பக்கத்தில் என்னுடைய தோட்டம் உள்ளது. இவருக்கு குத்தகைக்கு அனுமதி கொடுப்பதில் எந்த விதமான ஆட்சேபனையும் கிடையாது.

**3.திரு. பாலகிருஷ்ணன், மலுமிச்சம்பட்டி :**

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் பாலகிருஷ்ணன். மலுமிச்சம்பட்டி கிராமம். இந்த ரங்கநாதன் கல்குவாரிக்கு அனுமதி அளிப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்று மனப்பூர்வமாக தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**4.திரு. பொன்னுசாமி, :**

என் பெயர் பொன்னுசாமி. திரு.K. ரங்கநாதன் குவாரி அமைவது தொடர்பாக எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

**5.திரு. சலீம், போகம்பட்டி:**

என் பெயர் சலீம். நான் போகம்பட்டியில் இருக்கிறேன். இந்த குவாரி அமைப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

**6.திரு. செல்வராஜ், மைலேரிபாளையம் :**

அரசு அதிகாரிகள் அனைவருக்கும் வணக்கம். இங்கு கூடியிருக்கும் மரியாதைக்குரிய பொதுமக்களுக்கும் வணக்கம். இந்த குவாரி மூலமாக நேரடியாக 21 பேருக்கும் மறைமுகமாக 40 பேருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியதாக இருக்கிறது சுமார் 61 குடும்பங்கள் மேம்பாடு அடைவதற்கு நல்ல வழிவகை செய்யும் என்று நம்புகிறேன். இந்த குவாரி அமைவதில் எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை.

**7.திரு.சண்முகவேல்:**

என்னுடைய பெயர் சண்முகவேல். திரு.ரங்கநாதன் அவர்கள் குவாரி அமைப்பதற்கு எனக்கு ஆட்சேபனையில்லை.

**8.திரு.வெங்கடேசன், போகம்பட்டி:**

என்னுடைய பெயர் வெங்கடேசன். எங்களுடைய SKT ப்ளூ மெட்டல் நிறுவனத்திற்கு இப்போது கல் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. அதனால் நீங்கள் சீக்கிரம் ப்ராசஸ் பண்ணி கொடுத்தீர்களானால் எங்களுக்கு கொஞ்சம் உபயோகமாக இருக்கும். நன்றி.

9.திருமதி.ஜெபக்கனி, ராமநாதபுரம் :

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் ஜெபக்கனி. இந்த கல் குவாரியினுடைய அதிகாரி அய்யா அவர்களுக்கும், வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு அதாவது கல்குவாரி என்பது எப்போதுமே மக்களை உயர்த்தக்கூடிய விஷயம் தான். கால்நடைகள் வளர்ப்பதற்காக அவர்கள் செய்யக்கூடிய உதவிகள், அந்த சுற்றுப்புறத்தை சுகாதாரமாக வைத்துக்கொள்வதற்கு உதவிகள் செய்வார்கள். அதனால் கல்வி வசதி மற்றும் மருத்துவ வசதிகள், வேலை வாய்ப்பு கொடுப்பது, படிப்பிற்கேற்ற வேலை வாய்ப்பு கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த செய்வது போன்றவைகளை செய்கிறார்கள். அதனால் கல்குவாரிக்கு தடை இல்லாமல் லைசென்ஸ் தருமாறு என்னுடைய கருத்தாக கூறிக்கொண்டு உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் :

இங்கு கருத்துக்களை பதிவு செய்த அனைத்து பொதுமக்களுக்கும் எங்களது நன்றி. மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படும்.

கூட்ட முடிவில் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி கொடுத்த மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் மற்றும் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த பொது மக்கள் அனைவருக்கும் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கூட்டத்தை இனிதே முடிக்கப்படுகிறது. நன்றி வணக்கம். எனஅனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**மனுக்களின் எண்ணிக்கை : 0**

18/12/25

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கோயம்புத்தூர் தெற்கு.**

18/12/25

**வருவாய் கோட்டாட்சியர்,**
**கோயம்புத்தூர் தெற்கு,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**